புதுச்சேரி நகராட்சி
புதுச்சேரி
***

நாள்: 20.12.2025

<u>அறிவிப்பு</u>

மாண்புமிகு உச்சநீதிமன்றம் 07-11-2025 அன்று பிறப்பித்த உத்தரவில் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளால் ஏற்படும் விபத்தை தவிர்க்கும் வண்ணம் அவற்றை அகற்றி தங்குமிடங்கள் அல்லது கோசாலைகள்/கால்நடைப் பட்டிகளில் வைக்கப்பட வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. மேலும், புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், 1973 பிரிவு 408, 409ன் படி சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளை பிடித்து அடைப்பதற்கும் மற்றும் அபராதம் விதிப்பதற்கும் நகராட்சி ஆணையர் அல்லது நகராட்சி ஆணையரால் நியமிக்கப்பட்ட ஊழியருக்கு சட்டப்படி அதிகாரம் உள்ளது.

2. முதல் கட்டமாக நெடுஞ்சாலைகளில் மாடுகள் காணப்படும் இடங்களில் பொதுப்பணித்துறை மற்றும் நகராட்சி ஊழியர்கள் ரோந்து மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் சுற்றித் திரியும் கால்நடைகளைப் பிடிக்க புதுச்சேரி நகராட்சி மற்றும் பொதுப்பணித்துறை இணைந்து குழுக்கள் அமைத்து வரும் வாரங்களில் பகல் மற்றும் இரவு நேரங்களில் நடவடிக்கை மேற்கொள்ள முடிவுசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பிடிக்கப்படும் மாடுகளை உரிமையாளர்களுக்கு திருப்பித் தராமல், கோசாலைகள்/கால்நடைப் பட்டியில் அடத்து பின்னர் பொது ஏலம் விட தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, கால்நடைகளை வளர்ப்போர் தங்களது கால்நடைகளை தங்களுக்கு சொந்தமான இடங்களிலேயே நகராட்சியிடம் முறையான உரிமம் பெற்று சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான முறையில் வளர்க்குமாறு இறுதியாக கடுமையாக எச்சரிக்கப்படுகிறது.

3. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 07-11-2025 அன்று பிறப்பித்த உத்தரவில் தெரு நாய்களுக்கு உணவு அளிக்க தகுந்த இடங்களை அந்தந்த நகராட்சியே தேர்வு செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி புதுச்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 49 உணவளிக்கும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இணையதளத்தில் (www.pdymun.in) வெளியிடப்பட்டது. பொதுமக்கள் புதுச்சேரி நகராட்சி தேர்வு செய்து வெளியிடப்பட்ட இடங்களை தவிர வேறு இடங்களில் தெரு நாய்களுக்கு உணவு அளிக்க தடை செய்யப்பட்டுள்ளது. மீறினால், புதுச்சேரி நகராட்சி சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

...2 Contd.

4. தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் தெருக்களில் மாடுகள்/தெருநாய்கள் நடமாட்டம் குறித்த புகார் அளிக்க புதுச்சேரி நகராட்சியின் 9600084074 என்ற வாட்ஸ்ஆப் மற்றும் 0413- 2334074 என்ற தொலைபேசி எண்ணிலும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆணையர்
புதுச்சேரி நகராட்சி
புதுச்சேரி

---

மேற்படி அறிவிப்பை தங்கள் பத்திரிக்கையில் செய்திக் குறிப்பாக வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆணையர்
புதுச்சேரி நகராட்சி
புதுச்சேரி

பெறுநர்:

1. உயர் திரு செய்தி ஆசிரியர் – தினமலர்.
2. உயர் திரு செய்தி ஆசிரியர் – தினத்தந்தி.
3. உயர் திரு செய்தி ஆசிரியர் – தினகரன்.
4. உயர் திரு செய்தி ஆசிரியர் – தினமணி.
5. உயர் திரு செய்தி ஆசிரியர் – மாலை மலர்.